மீனவர்கள் பிரச்சினைக்கு தீர்வு காண ஒன்றிய பா.ஜ.க. அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்!

# திராவிட மாடல் ஆட்சியில் மீனவர்களுக்கு எண்ணற்ற திட்டங்கள்!

## உலக மீனவர் தின விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, நவ. 23- மீனவர்கள் பிரச்சினைக்கு தீர்வு காண ஒன்றிய பா.ஜ.க. அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திராவிட மாடல் ஆட்சியில் மீனவர்களுக்கு எண்ணற்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உலக மீனவர் தின விழாவில் காணொலி மூலம் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.11.2025) கன்னியாகுமரி மாவட்டம் குளச்சலில், கடலோர அமைதி மற்றும் வளர்ச்சி - குமரி மாவட்ட மீனவர் கூட்டமைப்புகள் சார்பில் நடைபெற்ற உலக மீனவர் நாள் விழாவில், காணொலிக் காட்சி வாயிலாக ஆற்றிய உரை வருமாறு :-

கடலோர அமைதி மற்றும் வளர்ச்சி அமைப்பும் - குமரி மாவட்ட மீனவர் கூட்டமைப்புகளும் இணைந்து நடத்தும் உலக மீனவர் நாள் விழாவில் உங்களோடு பேசுவதில் மிகவும் மகிழ்ச்சி!

உழைப்புக்கும் உறுதிக்கும் பெயர்பெற்ற மீனவ பெருமக்கள் எல்லோருக்கும் என்னுடைய உலக மீனவர் நாள் வாழ்த்துகள்! இந்த விழாவில் கலந்துகொண்டுள்ள மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள், சமூகத் தலைவர்கள், உள்ளிட்ட அனைவருக்கும் வணக்கம்!

கழக அரசுக்கும் மீனவர்களுக்குமான உறவு என்பது நீங்கள் மீன்பிடிக்கப் போகும் கடலைப் போலவே ஆழமானது! அதற்கு எடுத்துக்காட்டுதான், கடந்த 2023-ஆம் ஆண்டு இராமநாதபுரம் மாவட்டம், மண்டபத்தில், வரலாற்றிலேயே முதல் முறையாக நாம் பிரமாண்டமாக நடத்திய மீனவர் நல மாநாடு! 14 ஆயிரம் பயனாளிகளுக்கு நம்முடைய திராவிட மாடல் அரசு சார்பில் நலத்திட்ட உதவிகளை அந்த நிகழ்ச்சியில் நான் வழங்கியதும், பல புதிய அறிவிப்புகளை வெளியிட்டதும் உங்களுக்கு நன்றாக நினைவிருக்கும்.

அதுமட்டுமா, அக்காள்மடம் மீனவர் குடியிருப்பு பகுதிக்கு வந்து, மீனவக் குடும்பங்களின் பாச மழையில் நனைந்ததை நானும் மறக்கவில்லை! கள ஆய்வில் முதலமைச்சர் பயணத்தில் நாகை மாவட்டத்திற்கு நான் வந்தபோதும், நாகை, திருவாரூர், தஞ்சை, மயிலாடுதுறை மாவட்ட மீனவர் சங்க பிரதிநிதிகளை நேரில் சந்தித்து பேசினேன். தொடர்ந்து 2024-ஆம் ஆண்டு பிப்ரவரியில் அனைத்து விசைப்படகு சங்க நிர்வாகிகள், ஜுலையில் விசைப்படகு மற்றும் நாட்டுப்படகு மீனவர் சங்க நிர்வாகிகளை தலைமைச் செயலகத்தில் நேரில் சந்தித்து பேசினேன். இந்த ஆண்டும் பிப்ரவரி மாதம் இராமநாதபுரத்தைச் சேர்ந்த பல்வேறு மீனவர் சங்கத்தினரை சந்தித்தேன். மார்ச் மாதம் நாகை மாவட்டம் நம்பியார் நகரில் மீனவச் சொந்தங்களை சந்தித்து, அவர்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற உறுதியளித்தேன்.

தொடர்ந்து, ஏப்ரல் மாதம் தமிழ்நாடு சட்டமன்றத்தில் கச்சத்தீவை மீட்க ஒன்றிய அரசை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றினோம். நம்முடைய எந்தக் கோரிக்கையையும் ஒன்றிய பா.ஜ.க. அரசு செயல்படுத்த தயாராக இல்லாத நிலையிலும், நம்முடைய மீனவர்களுக்கு நம்மாலான உதவிகளை நாம்தான் செய்ய வேண்டும் என்று, ஏப்ரல் 7 அன்று

110 விதியின்கீழ் 576 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்டங்களை மன்னார் வளைகுடா பகுதி மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்களுக்காக அறிவித்தேன். இந்த திட்டங்களை எல்லாம், சரியாக ஒருங்கிணைத்து நிறைவேற்ற வேண்டும் என்று திட்ட கண்காணிப்பு பிரிவு உருவாக்கப்படும் என்றும் அறிவித்தேன்.

இந்த நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கும் குளச்சலில், துறைமுக விரிவாக்கப் பணிகளைத் தொடங்க வேண்டும் என்று நீங்கள் வைத்த கோரிக்கையை ஏற்று, அதற்கான 350 கோடி ரூபாயை விரைந்து வழங்க ஒன்றிய நிதியமைச்சருக்கு நான் கடிதம் எழுதி வலியுறுத்தியதும் உங்களுக்கு நினைவிருக்கும். இந்த ஆண்டு மே மாதம், இந்தியாவிலேயே முதன்முறையாக சூரை மீன் பிடிக்க திருவொற்றியூரில் மீன்பிடி துறை முகத்தை திறந்து வைத்தேன்! அதுமட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும் மீன்பிடி துறைமுகங்கள், மீன் இறங்குதளங்களை திறந்து வைத்திருக்கிறேன்.

கடல் அரிப்பு பாதிப்பைத் தடுப்பதற்கு, உங்கள் கோரிக்கைகளைக் கேட்டு தூண்டில் வளைவுகளை அமைத்து வருகிறோம்! இது எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பாக, உங்களின் மிக முக்கிய கோரிக்கையை ஏற்று, மீன்பிடி தடைக்கால நிவாரணத் தொகையை 5 ஆயிரம் ரூபாயில் இருந்து, 8 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி அறிவித்திருக்கிறோம்! அதுவும் 60 வயதிற்கு மேற்பட்ட மீனவர்களும் பயனடையும் வகையில், இந்த திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

மீனவர்களுக்கான வீடு கட்டும் திட்டத்தின் கீழ் பட்டாக்கள், மீன்பிடி தொழிலுக்கான கூட்டுறவுக் கடன், ஆயிரம் நாட்டுப் படகு மீனவர்களுக்கு 40 விழுக்காடு மானியத்தில் இயந்திரங்கள், மானிய விலை டீசல் அளவு உயர்வு, மீனவர்களுக்கான வீட்டுவசதி திட்டத்தின்கீழ் வழங்கப்படும் அலகுத் தொகை உயர்வு என்று ஏராளமான நலத்திட்டங்களை இந்த நான்கரை ஆண்டுகளில் செயல்படுத்தி இருக்கிறோம்! உங்கள் குமரி மாவட்டத்தில் மட்டும், கடந்த 4 ஆண்டுகளில் மீனவர்களுக்காக 567 கோடி ரூபாய் மதிப்பிலான உள்கட்டமைப்பு பணிகளை செய்து கொடுத்திருக்கிறோம்!

தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளைப் போலவே, திராவிட மாடல் அரசு சார்பில் மீனவர்களுக்காக செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களின் பட்டியலும் மிக நீளமானது. இராமேஸ்வரம் வரை வந்தாலும், உங்களை சந்திக்க பிரதமர் நேரம் ஒதுக்கவில்லை என்று உங்கள் ஏமாற்றத்தை பதிவு செய்திருந்தீர்கள். ஆனால், நான் அப்படி இல்லை. கடலோர மாவட்டங்களுக்கு எப்போது வந்தாலும் மீனவர் சங்க பிரதிநிதிகளை சந்திக்கிறேன், உங்கள் வீடுதேடி வந்து உங்கள் குடும்பத்தில் ஒருவனாகதான் நான் இருக்கிறேன். நீங்கள் நினைத்தால் எப்போது வேண்டுமென்றாலும் தலைமைச் செயலகத்திலும் என்னைச் சந்திக்கலாம் என்கிற அளவுக்கு மீனவர்களுக்கு நெருக்கமான அரசாக, நம்முடைய திராவிட மாடல் அரசு இருக்கிறது!

இப்படி, தொடர்ந்து உங்களின் தொடர்பில் இருந்து, உங்கள் தேவைகளை, கோரிக்கைகளுக்கு செவிமடுத்து, உடனே நிறைவேற்றுபவன்தான் இந்த ஸ்டாலின்! இந்த நல்லுறவு என்றென்றும் தொடர வேண்டும்! இலங்கைக் கடற்படையால் தமிழ்நாட்டு மீனவர்கள் சந்திக்கும் இன்னல்கள், உயிரிழப்புகளை தவிர்க்க உறுதியான நடவடிக்கைகளை ஒன்றிய அரசு முன்னெடுக்க வேண்டும்! மீனவர்களின் பிள்ளைகள் நல்ல முறையில் படித்து பெரிய பொறுப்புகளுக்கு வர வேண்டும்! நம்முடைய அரசின் திட்டங்கள், கடனுதவிகளை பயன்படுத்தி மீன்வளம் சார்ந்த மதிப்பு கூட்டப்பட்ட தொழில்களிலும் நீங்கள் சிறந்து விளங்க வேண்டும்!

அடுத்த ஆண்டு அமையவுள்ள திராவிட மாடல் 2.0 ஆட்சியில், இன்னும் இன்னும் உங்களின் உயர்வுக்கான திட்டங்களை நான் செயல்படுத்த வேண்டும் என்று என்னுடைய ஆவலை பகிர்ந்துகொண்டு, அதற்கு உங்களின் ஆதரவு எப்போதும் இருக்கும் என்ற நம்பிக்கையோடு விடைபெறுகிறேன்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (21.11.2025) முகாம் அலுவலகத்தில், காங்கிரஸ் கட்சியின் மாநிலங்களவை உறுப்பினரும், உச்சநீதிமன்ற மூத்த வழக்கறிஞருமான விவேக் கே. தன்கா (Mr.Vivek K Tankha) சந்தித்து பேசினார். அப்போது முதலமைச்சர் அவர்கள் தான் எழுதிய "உங்களில் ஒருவன்" புத்தகத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பான "One Among You புத்தகத்தை விவேக் கே. தன்கா அவர்களிடம் வழங்கினார்.

மீனவர்களின் கோரிக்கைகள் அத்தனையையும் நிறைவேற்றும்

# மீனவ நண்பனாக என்றும் - நமது திராவிட மாடல் அரசு தொடரும்!

## உலக மீனவர் நாளையொட்டி – முதல்வர் மு.க, ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

சென்னை, நவ.23- உலக மீனவர் நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், "மீனவர்களின் கோரிக்கைகள் அத்தனையையும் நிறைவேற்றும் மீனவ நண்பனாக என்றும் நமது திராவிட மாடல் அரசு தொடரும்!" என்று குறிப்பிட்டுள்ளார்.

உலக மீனவர் நாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு :-

**உழைப்பும் உறுதியும் மிக்க மீனவத் தோழர்கள் அனைவருக்கும் உலக மீனவர் நாள் வாழ்த்துகள்!**

**மீனவர் நல மாநாடு, மீன்பிடித் தடைக்கால நிவாரணம் உயர்வு, மானிய டீசல் அளவு உயர்வு, கடனுதவிகள், மீன்பிடித் துறைமுகங்கள், மீன் இறங்குதளங்கள், தூண்டில் வளைவுகள் என உங்கள் கோரிக்கைகள் அத்தனையையும் நிறைவேற்றும் மீனவ நண்பனாக என்றும் நமது திராவிட மாடல் அரசு தொடரும்!**

இவ்வாறு அந்த வாழ்த்துச் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

நவ. 27 – இளைஞர் எழுச்சி நாளையொட்டி நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் –

# பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் - 100 நலஉதவி நிகழ்ச்சிகள்!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. அறிவிப்பு!

*நாமக்கல், நவ. 23 - நவம்பர் 27 இளைஞர் எழுச்சி நாளையொட்டி நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் வழங்குவது மற்றும் 100 நலத்திட்ட நிகழ்ச்சிகள் நாமக்கல் கிழக்கு மாவட்ட செயற்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.*



*நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக செயற்குழு கூட்டம் நாமக்கல் மோகனூர் சாலை, முல்லை நகர் கலைஞர் அறிவாலயம் இனமான பேராசிரியர் கூட்டரங்கில் நடைபெற்றது. மாவட்ட அவைத் தலைவர் சி.மணி மாறன் தலைமை தாங்கினார். நாமக்கல் கிழக்கு மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்றது. நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம், நாமக்கல் மாநகராட்சி மேயர் து.கலாநிதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.*

*கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.*

*இக்கூட்டத்தில் மாநில மகளிர் தொண்டர் அணி செயலாளர் ராணி, மாவட்ட துணை செயலாளர்கள் நலங்கிள்ளி, ராணி பெரியண்ணன், பொருளாளர் ஏ.கே.பாலசந்திரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர், துணை மேயர் பூபதி, நகர செயலாளர்கள் ராணா ஆனந்த் சிவக்குமார், ஒன்றிய செயலாளர்கள் அசோக்குமார், ராமசுவாமி, நவலடி, பழனிவேல், ஜெகநாதன், பாலசுப்பிரமணி, செந்தில் முருகன், எம்.பி. கௌதம், ஜெயபிரகாஷ், ஆர்.எம்.துரைசாமி,*

*பேரூர் செயலாளர்கள் தனபாலன், முருகேசன், செல்லவேல், சுப்பிரமணி, ஜெயக்குமார் பொன்.நல்லதம்பி பழனியாண்டி, அன்பழகன், கண்ணன், ராஜேஷ் மற்றும் சார்பு அணி நிர்வாகிகள் பொன் சித்தார்த், கிருபாகரன், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், மகளிர் அணி நிர்வாகிகள், நகர்மன்ற, பேரூர் மன்ற தலைவர்கள் சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.*

*கூட்டத்தில் கழக இளைஞர் அணி செயலாளரும், தமிழ்நாடு துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு நாமக்கல் கிழக்கு மாவட்டத்தின் சார்பாக நாமக்கல் கிழக்கு மாவட்டம் ஒன்றிய, நகர, பேரூர்களில் உள்ள அரசு மருத்துவமனை மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் நவம்பர் 27ம் தேதி அன்று பிறக்கும் அனைத்து குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவிக்கப்படும்.*

*ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் மாவட்ட சார்பு அணிகள் சார்பாக நவம்பர் 27 மற்றும் 28 ஆகிய நாட்களில் ஆதரவற்றோர் இல்லத்திற்கு உணவு வழங்குதல், விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள், ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளி மாணவ செல்வங்களுக்கு நோட்டு புத்தகம் வழங்குதல் , தூய்மை காவலர்களுக்கு மதிய உணவு வழங்குதல், கழக மூத்த முன்னோடிகளுக்கு வேட்டி வழங்குதல், போன்ற 100 இடங்களில் நலத்திட்ட நிகழ்ச்சிகள் மற்றும் கழக கொடி ஏற்றி சர்க்கரை பொங்கல் வழங்குவது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டது.*

தமிழ் வளர்ச்சிக் கழகத்தின்

# 'சொல் புதிது' எனும் திட்டத்தின் ஏழாவது கூட்டம்!

## முனைவர் ம.இராசேந்திரன் தலைமையில் நடைபெற்றது!

*சென்னை, நவ. 23- தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் 'சொல் புதிது' என்னும் திட்டத்தின் ஏழாவது கூட்டம் தமிழ் வளர்ச்சிக் கழக அலுவலகத்தில் 19.11.2025 முற்பகல் நடைபெற்றது.*

*இக்கூட்டத்திற்குத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் முனைவர் ம. இராசேந்திரன் தலைமை வகித்தார். இக்கூட்டத்தில் பேராசிரியர்கள் வ. ஜெயதேவன், மு. இராமசாமி, ஒப்பிலா மதிவாணன், பாரதிபாலன், சா. சரவணன், நா. சந்திரசேகரன், ஆ. மணவழகன், ம. இளங்கோவன், மற்றும் ராஜ் கண்ணன், மு. முருகேசன், முனைவர் அ. ஜேம்ஸ், ஆகியோர் கலந்துகொண்டனர். இக்கூட்டத்தில் பின்வரும் 30 சொற்கள் முடிவு செய்யப்பெற்றன.*

*ஆங்கிலம்- தமிழ் சொற்கள் விவரம் வருமாறு:-*

*Brownfield project தாளடித் திட்டம், Greenfield project முதலடித் திட்டம், Aironox உடை மிடுக்கி, Aerofoot காற்று நடைக் காலணி, Invisacook மறை அடுகலன், Water walking shoes நீர்மிசைக் காலணி, Grow bag பயிர் வளர்ப்புப் பை, Air taxi Flying taxi வாடகை வானுந்து, Air car - வானுந்து, Zeptosecond - நுண்ணொடி, Wind farm / Wind park காற்றாலைப் பண்ணை/ பூங்கா, Cyber fraudster இணைய மோசடிக்காரர், Global governance புவி ஆளுகை, Rapid Stroke Response Team - பக்கவாத மருத்துவ விரைவுக் குழு, Fast Breeder Test Reactor அணுமின் விரைவாக்க உலை, Intraday trading நாள் பங்கு வணிகம், Combo - சேர்க்கை, OTT இணையப் படத் தளம் (இபத), White collar terrorism அறிவுக் கயவர் பயங்கரவாதம்/வன்முறை, Plastic surgeon மெய்சீர் (அறுவை) மருத்துவர், Deepsea mining ஆழ்கடல் சுரங்கப்பணி, Digital connectivity இணையத் தொடர்பு, Digital infrastructure இணையக் கட்டமைப்பு, Assistive Technology மாற்றுத் திறன் தொழில்நுட்பம், Down Jacket இறகுபொதி மேலுடை, Bomber Jacket கவச மேலுடை, Puffer Jacket புடைப்பு மேலுடை, Varsity Jacket/Letterman Jacket அடையாள மேலுடை, Hoodie Jacket தொப்பி மேலுடை, Legging காலொட்டு உடை*

*இவ்வாறு தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் முனைவர் ம.இராசேந்திரன் தெரிவித்துள்ளார்.*



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.11.2025) சென்னை ஹாரிங்டன் சாலை வேம்புலி அம்மன் கோயில் திட்டப் பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் வேம்புலி அம்மன் கோயில் மற்றும் சீனிவாசபுரம் பகுதி1 ஆகிய திட்டப் பகுதிகளில் மொத்தம் 89.70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள 584 அடுக்குமாடி குடியிருப்புகளை திறந்து வைத்து பயனாளிகளுக்கு குடியிருப்பிற்கான ஒதுக்கீட்டு ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வில் அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், பி.கே.சேகர்பாபு, மேயர் ஆர்.பிரியா, தயாநிதி மாறன் எம்.பி., தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, த.வேலு, இ. பரந்தாமன், அ.வெற்றி அழகன், ஜோசப் சாமுவேல், அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், இந்தியா ஆக்கி கூட்டமைப்பு இணைந்து நடத்தும் ஆண்கள் ஜுனியர் ஆக்கி உலக கோப்பைக்கான போட்டிகள் வருகிற 28ந் தேதி முதல் அடுத்த மாதம் (டிசம்பர்) 10ந் தேதி வரை சென்னை மற்றும் மதுரையில் நடைபெற உள்ளது. கடலூர் மஞ்சக்குப்பம் அண்ணா விளையாட்டு மைதானத்தில் ஆண்கள் ஜுனியர் ஆக்கி உலக கோப்பை அறிமுக விழா நடைபெற்றது. விழாவில் மாவட்ட ஆட்சியர் சிபி ஆதித்யா செந்தில்குமார் முன்னிலையில் அமைச்சர் சி.வெ. கணேசன், கடலூர் மாவட்ட விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு ஆக்கி உலக கோப்பையை அறிமுகம் செய்து வைத்து சிறப்புரையாற்றினார்.